# GOTHI PLASCON (INDIA) LIMITED

Date: 04.09.2023

To,
BSE Limited,
Corporate Relationship Department,
Floor 25, PJ Towers
Dalal Street
Mumbai-400 001

Dear Sir/madam,

**ISIN : INE538G01018 SCRIP CODE : 531111**

Sub :Newspaper publication of Notice of 28th Annual General meeting of the company.

**Ref: Scrip Code: 531111**

Pursuant to Regulation 47 of SEBI (Listing Obligations & Disclosure Requirements )Regulations ,2015,we enclose herewith a copy of newspaper advertisement published in Trinity Mirror (English newspaper) and Makkal Kurral (Tamil newspaper) regarding the Notice of 28th Annual General meeting of the company.

Kindly take the information on record.

Thanking You.

Yours sincerely,
For Gothi Plascon (India) Limited

MEGHA SOMANI Digitally signed by MEGHA SOMANI Date: 2023.09.04 10:53:42 +05'30'

Megha Somani
(Company Secretary & Compliance Officer)
(F12093)

# ஜிஆர்டி ஜுவல்லர்ஸ்: தேசிய அளவில் பிளாட்டின நகை விற்பனைக்கு 7வது முறையாக சாதனை விருது

சென்னை, செப். 2–

தேசிய அளவில் பிளாட்டினம் நகை விற்பனையில் ஜிஆர்டி ஜுவல்லர்ஸ் தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது. இதற்கு பிளாட்டினம் கில்ட் இந்தியா தேசிய சாதனை விருது 7வது ஆண்டாக கிடைத்துள்ளது.

இந்நிறுவனம் 1964ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து, கைதேர்ந்த கைவினைத்திறன் கலையின் கருத்துருவமாக இருந்து வருகிறது. மேலும் நேர்மையான மற்றும் எப்போதுமே அதிகரித்து கொண்டே செல்லும் வாடிக்கையாளர்களின் பாராட்டை பெற்றதோடு, அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையையும் பெற்று வருகிறது. இந்த வெற்றியின் பின்னணியில் உள்ள ரகசியமானது தூய்மை மற்றும் தனிச்சிறப்பை மையமாகக் கொண்ட அவர்களின் முயற்சிகளின் அனைத்து அம்சங்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பில் அடங்கியுள்ளது.

இந்நிறுவன செயின் ஸ்டோர்ஸ் எப்போதுமே பிளாட்டினம் நகைகளின் மிகப்பெரிய கலெக்ஷன் மற்றும் பிரத்யேக வடிவமைப்புகளை வழங்குகின்றன. பிளாட்டினம் கில்ட் இந்தியா நடத்திய மதிப்புமிக்க விருது



வழங்கும் விழாவில் இந்நிறுவனத்தின் சாதனைகள் பிரமாண்டமாக காட்சிப்படுத்தப்பட்டன. ஜிஆர்டிக்கு மிக நிறைவான பாராட்டுக்கள் கிடைக்கப்பெற்றது. தொடக்கத்தில் "Best Chain Stores Platinum – South Region" என்ற பட்டத்தை பெற்று தொடர்ந்து, மேலும் மதிப்பு மிக்க "Best Chain Stores Platinum – National" என்ற பெருமையை பெற்றது.

இந்த வெற்றியானது ஜிஆர்டியின் சிறப்பான தொடர் தேடலுக்கு ஒரு சான்றாகும். இந்நிறுவனம் தொடர்ந்து 7வது முறையாக இந்த இவ்விருதை வென்றுள்ளது. அவர்களின் தளராத அர்ப்பணிப்பானது சிறந்த டிசைன்ஸ், ரேஞ்ச், பிளாட்டினம் மற்றும் பிற நகைகளின் மீதுள்ள வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியில் வெளிப்படுகிறது.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் இயக்குனர் ஜி.ஆர். 'ஆனந்தி அனந்தபத்மநாபன் கூறுகையில், "நீங்கள் உருவாக்குவது எதுவாக இருந்தாலும், அதன் அஸ்திவாரம் சரியானதாக இருந்தால் அதன் முடிவுகள் அற்புதமாக அமையும். தூய்மை, நம்பிக்கை மற்றும் நிறைவான கைவினைத்திறன் ஆகியவற்றை வழங்கும் பலன்களை இன்று நாம் அறுவடை செய்கிறோம் என்றார்."'

நிர்வாக இயக்குனர் ஜி.ஆர். ராதாகிருஷ்ணன் கூறுகையில், "மதிப்புமிக்க இவ்விருதுகளை வென்றது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. குறிப்பாக தொடர்ந்து நாங்கள் 7வது முறை வெற்றி பெற்றுள்ளோம். இது எங்கள் வாடிக்கையாளர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் அன்பைக் காட்டுகிறது. மேலும் அவர்களின் அனைத்து சிறப்பு தருணங்களுக்கும் இந்நிறுவனத்துடன் அவர்கள் பகிர்ந்து கொள்ளும் பந்தத்தையும் காட்டுகிறது'' என்றார்.

# புத்துலகு படைக்கும் நோக்கில் 'பிரிக்ஸ்' நாடுகள் கூட்டமைப்பு

## 15 வது உச்சி மாநாடு பற்றிய கலந்தாய்வில் ரஷ்ய தூதர் ஒலீஜ் அவ்தீவ் பேச்சு

சென்னை, செப். 2–

**புத்துலகு படைக்கும் நோக்கில் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பின் 15 வது மாநாடு முன்னேறிக்கொண்டிருக்கிறது என்று சென்னைக்கான ரஷ்ய துணை தூதர் ஒலீஜ் அவ்தீவ், இந்து என்.ராம் ஆகியோர் பேசினார்.**



பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய 5 நாடுகள் உறுப்புகளாக உள்ள, பிரிக்ஸ் அமைப்பின் 15வது உச்சி மாநாடு, தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் ஆகஸ்ட் 22ம் தேதி நடைபெற்றது. அந்த மாநாட்டின் விளைவுகள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் குறித்த கலந்தாய்வு கூட்டம், சென்னை ஆழ்வார்பேட்டை ரஷ்ய பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது. ரஷ்ய மையத்தோடு இணைந்து, பெனின்சுலா பவுன்டேசன் மற்றும் இந்திய ரஷ்ய தொழில் வர்த்தக கழகமும் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட தென்னிந்தியாவுக்கான ரஷ்ய தூதர் ஓலிஜ் அவ்தீவ் பேசியதாவது:–

மேற்குலகு நாடுகள் ஜனநாயகம், மனித உரிமை என்ற போர்வையில் ஒளிந்து கொண்டு, வளரும் நாடுகளை சுரண்டும் வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால், பிரிக்ஸ் நாடுகள் அமைப்பு, உலகில் உள்ள எந்த அமைப்புக்கும் எதிரானதாக இல்லாமல், அனைத்து நாடுகளும், மக்களும் பயன்பெறும் விதமான சமத்துவ கொள்கை கொண்ட புத்துலகை அமைக்க வேண்டும் என்றே பாடுபடுகிறது. இதன்மூலம் ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு உதவும் நோக்கில், அறிவு வளங்களை பகிர்ந்து கொள்கிறது.

மேலும் ஒரு நாட்டின் நலனை மற்ற நாடு மதிப்பு கொடுப்பது என்ற, உலக நன்மையை நோக்கியே செயல்படுகிறது. இந்த அமைப்பில், இன்னும் 6 நாடுகள் சேர உள்ளது. அதன்படி, அர்ஜெண்டினா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமிரகம் ஆகிய நாடுகளை பிரிக்ஸ் அமைப்பின் முழுநேர உறுப்பினர்களாக சேர்க்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு 2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் அமலுக்கு வர உள்ளது. இதன் மூலம் புத்துலகு படைக்க இந்த பிரிக்ஸ் அமைப்பு தொடர்ந்து செயல்படும் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது என்று தெரிவித்தார்.

### நம்பிக்கை தரும் பிரிக்ஸ்

அதனைத் தொடர்ந்து இந்து என். ராம் பேசியதாவது:–

தென் ஆப்ரிக்க தலைநகர் ஜோகன்னஸ்பார்கில் நடைபெற்ற பிரிக்ஸ் அமைப்பின் 15 வது உச்சி மாநாட்டில் முக்கியமான செய்தி சொல்லப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தன்னிச்சையாக செயல்பட்டு, தங்கள் நலன்களுக்காக ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்கு பொருளாதார தடை உள்ளிட்ட பல்வேறு தடைகளை விதிப்பது, மற்றும் கொடுங்கோல் நாடுகள் போல் காட்டும் செயலை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று உறுதிப்படுத்தியுள்ளது. இந்தியாவில் எந்த ஆட்சி இருந்தாலும், ரஷ்யாவுடன் தொடர்ந்தும் இணைந்தும் பயணிப்பதை உறுதிப்படுத்தி வருகிறது. இது எப்போதும் தொடரும் என்பதில் எந்த அய்யமும் இல்லை. மேலும் பிரிக்ஸ் அமைப்பின் சிறந்த செயல்பாடுகளை பத்திரிகைகள் நல்லவிதமாக எடுத்துச்செல்ல வேண்டும் என்று கூறினார்.

இந்த கலந்தாய்வு நிகழ்ச்சியை பெனின்சுலா அமைப்பின் நிறுவனர் ஏர்மார்ஷல் எம். மதேஸ்வரன் தலைமை தாங்கி வழி நடத்தினார். அவர் பேசும்போது, மேலை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உலக வங்கி உள்ளிட்ட நிறுவனங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, வளரும் நாடுகளுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து தங்கள் ஆதிக்கத்தை செலுத்துகிறார்கள். உலகத்தில் காலனி ஆதிக்கம் முடிவு பெற்று, வளரும் நாடுகள் சுதந்திரம் பெற்று இருந்தாலும்கூட, வளர்ந்த அந்த நாடுகள், பல்வேறு சட்ட திட்டங்கள் மூலம், காலனி நாடுகளாக இருந்தவற்றை கட்டுப்படுத்தவே செய்கிறார்கள். இதில் இருந்து விடுபடுவதற்கும் மேலை நாடுகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடவும் பிரிக்ஸ் அமைப்பின் செயல்பாடுகள் நமக்கு நம்பிக்கையை தருகிறது என்றார்.

### மாணவிகளுக்கு சான்றிதழ்

இந்த நிகழ்ச்சியில், லயோலா கல்லூரியின் டாக்டர் அழகு பெருமாள் ராமசாமி கலந்து கொண்டு பிரிக்ஸ் அமைப்பின் 15 வது உச்சி மாநாடு வரலாற்று சிறப்பு மிக்க ஒன்றாக உள்ளது. இதில் இன்னும் 6 நாடுகள் சேர உள்ளது வரவேற்கத்தக்கது. இது பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று பேசினார். இந்த நிகழ்ச்சியில், இந்திய ரஷ்ய தொழில் வர்த்தக கழகத்தின் செயலாளர் பி. தங்கப்பன் உள்ளிட்டோர் பேசினர். நிகழ்ச்சியில் சென்னைப் பல்கலைக்கழகம், லயோலா கல்லூரி மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக நடைபெற்ற கேள்வி பதில் நிகழ்ச்சியில் மாணவிகள் எழுப்பிய கேள்விகளுக்கு கலந்தாய்வில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் பதிலளித்தனர். பிரிக்ஸ் அமைப்பில் நமது அண்டை நாடுகளை ஏன் சேர்க்கவில்லை என்று ஒரு மாணவி கேட்டபோது, பிரிக்ஸ் அமைப்பில் சேர 40 நாடுகள் விரும்பம் தெரிவித்தன. 23 விண்ணப்பங்கள் பெறப்பட்டு மேற்சொன்ன 6 நாடுகளை இணைத்துக்காள்ள முடிவெடுக்கப்பட்டது. எதிர்காலத்தில், நமது அண்டை நாடுகளும் இதில் இணைய வாய்ப்பு இருக்கும் என்றார். மாணவர்களுக்கு நிறைவாக சான்றிதழ்களை ரஷ்ய தூதர் வழங்கினார்.

# எல்.ஐ.சி.யின் பிரீமியம் வருவாய் ரூ.2 லட்சத்து 32 ஆயிரம் கோடி

## காலாவதியான பாலிசி புதுப்பிக்கும் முகாம் துவக்கம்

சென்னை, செப்.2

2022–23 நிதி ஆண்டில் எல்.ஐ.சி.யின் பிரீமியம் வருவாய் ரூ.2 லட்சத்து 32 ஆயிரம் கோடி ஆகும். சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தி எல்.ஐ.சி. தனது 67வது ஆண்டினை கொண்டாடி வருகிறது.

இந்தியா முழுவதும் காப்பீடு மற்றும் சேமிப்பு கலாசாரத்தை வளர்ப்பதில் எல்.ஐ.சி. தொடர்ந்து ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த மார்ச் மாதத்தோடு நிறைவடைந்த நிலவரப்படி எல்.ஐ.சி. 27.74 கோடி பாலிசிகளை வழங்கியுள்ளது. மதிப்புமிக்க தங்களது பாலிசிதாரர்கள், காலாவதியான பாலிசிகளை புதுப்பிக்கும் வகையில் சிறப்பு மீட்பு முகாமினை நேற்று முதல் தொடங்கியுள்ளது. 1956ம் ஆண்டு தொடக்கம் முதலாக ரூ.5 கோடியில் எல்.ஐ.சி. தொடங்கப்பட்டது.

கடந்த மார்ச் மாத நிலவரப்படி எல்.ஐ.சி. நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துகளின் மதிப்பு ரூ.43 லட்சத்து 97 ஆயிரத்து 205 கோடி ஆகும். 2022–23 நிதி ஆண்டில் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தி, சந்தையில் தலைவராக எல்.ஐ.சி. உயர்ந்து நிற்கிறது.

இந்த நிதி ஆண்டில் பிரீமியம் மூலம் பெறப்பட்ட வருவாய் ரூ.2 லட்சத்து 31 ஆயிரத்து 900 கோடி ஆகும். மேலும் 2 கோடியே 4 லட்சத்து 65 ஆயிரம் புதிய பாலிசிகளை விற்பனை செய்துள்ளது.

8 மண்டல அலுவலகங்கள், 113 கோட்ட அலுவலகங்கள், 74 வாடிக்கையாளர் மண்டலங்கள், 2 ஆயிரத்து 48 கிளை அலுவலகங்கள், 1,580 அலுவலகங்கள் மற்றும் 13 லட்சத்து 47 ஆயிரம் ஏஜெண்டுகள், வாடிக்கையாளர்கள் 2022–23 நிதி ஆண்டில் சிறப்பாக சேவையாற்றினார்கள். ரூ.2 லட்சத்து 9 ஆயிரத்து 938 கோடியே 63 லட்சம் மதிப்பிலான 2 கோடியே 25 லட்சத்து 51 பாலிசி கிளெய்ம்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

எல்.ஐ.சி.யின் பாலிசி முதிர்வு கிளெய்ம் 92.65 சதவீதம் ஆகவும், பாலிசிதாரர் இறப்படையும் சமயத்திலான முதிர்வு கிளெய்ம் 98.60 சதவீதம் ஆக உள்ளது.

கடந்த 2006ம் ஆண்டு சமுதாய வளர்ச்சிக்காக எல்.ஐ.சி. பொன்விழா அறக்கட்டளை நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளை வறுமை ஒழிப்பு, பேரிடர் மீட்பு, கல்விக்கு உதவி உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்தியது.

எல்.ஐ.சி. பொன்விழா அறக்கட்டளை கடந்த மார்ச் மாதம் வரையிலான நிலவரப்படி ரூ.198 கோடியே 11 லட்சம் வினியோகித்துள்ளது. 67வது ஆண்டினை கொண்டாடி வரும் எல்.ஐ.சி. தனது பாலிசிதாரர்களின் பல்வேறு நிதி தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி, நாட்டின் வளர்ச்சிக்கு பங்களித்து வருகிறது.

இத்தகவல் எல்.ஐ.சி. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



எல்ஐசி சென்னை–2 பிரிவு டிவிஷனல் அலுவலகத்தில் இன்சூரன்ஸ் வார விழாவை தமிழ்நாடு அரசு கருவூலம் கணக்குத் துறை கமிஷனர் கே.விஜயேந்திர பாண்டியன் துவக்கி வைத்து, நாடு முன்னேற்றத்தில் அக்கறை காட்டும் எல்ஐசியை பாராட்டினார். டிவிஷன் மார்க்கெட்டிங் மேலாளர் பி.முத்துராமன் வரவேற்றார். சீனியர் டிவிஷனல் மேலாளர் ஜி.குமார் பேசினார். விற்பனை மேலாளர் டி.ஜார்ஜ் ஜோசுவா ஏம்ஸ் நன்றி கூறினார்.

---

**மெகாசாப்ட் லிமிடெட்**

MEGASOFT

CIN: L24100TN1999PLC042730,

பதிவு அலுவலகம்: 85, கச்சேரி சாலை, மயிலாப்பூர், சென்னை, இந்தியா–600 004.
கார்ப்பரேட் அலுவலகம்: 8வது தளம், யூனிட் எண். 801B, ஜெயின் சத்குரு இமேஜ்'ஸ் கேபிடல் பார்க், மனை எண். 1, 28 & 29, 98/4/1 முதல் 13 வரை, இமேஜ் கார்டன்ஸ் சாலை, மாதப்பூர், ஹைதராபாத், தெலுங்கானா 500081
Phone: +91-44-24616768 Fax: +91-44-24617810, Email: investors@megasoft.com Website : www.megasoft.com

**23வது வருடாந்திர பொதுக்கூட்டம், மின்னணு வாக்குப்பதிவு மற்றும் புத்தகம் மூடல் அறிவிப்பு**

கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் ("எம்சிஏ") வெளியிட்ட ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 17/2020, மே 05, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 20/2020 மற்றும் ஜனவரி 13, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 02/2021, டிசம்பர் 08,2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 20/2021, மே 05,2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 2/2022 மற்றும் டிசம்பர் 28,2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 10/2022 (எம்சிஏ சுற்றறிக்கைகள்) வழங்கிய வழிகாட்டுதல்களுக்கு இணங்க மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியாவின் ("செபி") மே 12, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79, டிசம்பர் 9 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD/CIR/P/2020/242 மற்றும் ஜனவரி 15, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 மற்றும் மே 13, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62, ஜூன் 03, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/DDHS/DDHS_Div2/P/CIR/2022/079, ஜனவரி 5, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/ CFD/PoD-2/P/CIR/2023/4 ஆகியவற்றுக்கு இணங்க 23வது வருடாந்திர பொதுக்கூட்ட (''ஏஜிஎம்'') அறிவிப்பில் உள்ள அலுவல்களை செயல்படுத்த மெகாசாப்ட் லிமிடெட் உறுப்பினர்களின் 23வது வருடாந்திர பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை, 22 செப்டம்பர் 2023 அன்று இந்திய நேரப்படி காலை 10.00 மணிக்கு காணொலி காட்சி (''VC'')/ பிற ஆடியோ விஷுவல் வழிமுறைகள் ("OAVM") மூலம் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி, 23வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் மின்னணு நகல், மின்னணு வாக்குப்பதிவிற்கான நடைமுறை மற்றும் வழிமுறைகள், 2022–2023 ஆண்டறிக்கை ஆகியவை கம்பெனி/டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும். மேற்கண்ட ஆவணங்கள் www.megasoft.com,www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றிலும் கிடைக்கும்.

VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான வழிமுறைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு முறை ஆகியவை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. பங்குதாரர்களுக்கான உள்நுழைவு நற்சான்றிதழ்கள், கார்ப்பரேஷன் அல்லது அந்தந்த டிபி–யில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத காகித வடிவத்தில் அல்லது மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் பற்றி இந்த அறிவிப்பில் உள்ளது.

மேற்கண்ட சுற்றறிக்கைகளின்படி கூட்டத்தின்போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு, VC/OAVM மற்றும் மின்னணு வாக்குப்பதிவு ஆகியவற்றுக்கான வசதிகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட்(சிடிஎஸ்எல்)டின் சேவையை நிறுவனம் ஈடுபடுத்தியுள்ளது.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108, திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44ன்படி, வெள்ளிக்கிழமை 22 செப்டம்பர் 2023 அன்று நடைபெறவுள்ள 23வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல் அயிட்டங்கள் குறித்து மின்னணு வாக்குப்பதிவு முறையின் மூலம் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கான வசதியை நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது. கூட்டம் நடைபெறும் இடத்திலிருந்து வேறு இடத்தில் இருந்தாலும் உறுப்பினர்கள் மின்னணு வாக்குப்பதிவு முறையைப் (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) பயன்படுத்தி வாக்களிக்கலாம். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு திங்கட்கிழமை, 18 செப்டம்பர் 2023 அன்று இந்திய நேரப்படி காலை 09.00 மணிக்கு துவங்கி வியாழக்கிழமை, 21 செப்டம்பர் 2023 அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு முடிவடையும். மேற்கூறிய நேரம் மற்றும் தேதிக்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது மற்றும் 21 செப்டம்பர் 2023 அன்று மாலை 5.00 மணிக்குப் பிறகு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடக்கப்படும். கட்ஆப் தேதியான வெள்ளிக்கிழமை, 15 செப்டம்பர் 2023 அன்று உறுப்பினர்கள்/பயனாளிகளின் பதிவேட்டில் கண்டுள்ள பெயரில் உள்ள ஒரு நபர், கூட்டத்தின் போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியைப் பெற மட்டுமே உரிமை உண்டு. வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் நோக்கத்திற்காக கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் சனிக்கிழமை, 16 செப்டம்பர் 2023 அன்று முதல் வெள்ளிக்கிழமை, 22 செப்டம்பர் 2023 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டு இருக்கும்.

கூட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு உறுப்பினர் ஆன ஒரு நபர் மற்றும் கட் ஆப் தேதி அன்று பங்குகளை வைத்துள்ளவர் helpdesk.evoting@cdslindia.comக்கு ஒரு கோரிக்கை அனுப்பி பயனர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம் அல்லது சிடிஎஸ்எல்–லை கட்டணமில்லா எண் 1800 22 55 33ல் தொடர்பு கொள்ளலாம். பயனர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெறுவதற்கான விரிவான நடைமுறை கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது மற்றும் கம்பெனியின் இணையதளத்தில் கிடைக்கும். மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே சிடிஎஸ்எல்–ல் ஒரு உறுப்பினர் பதிவு செய்திருந்தால் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க அவர் தற்போதைய பயனர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.

கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு வசதி கிடைக்கப் பெறும் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்காமல் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் கூட்டத்தின் போது தங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த முடியும்.

ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின், அது குறித்து உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவை அணுகலாம் மற்றும் www.evotingindia.com படியிறக்க பிரிவில் உள்ள உறுப்பினர்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு கையேட்டை பார்வையிடலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு இமெயில் அனுப்பலாம். மேற்குறிப்பிட்டுள்ள இமெயில் முகவரியில் உள்ள கம்பெனி அல்லது ஐதராபாத்தில் உள்ள கம்பெனியின் கார்ப்பரேட் அலுவலகம் அதாவது 8வது தளம், யூனிட் எண். 801B, ஜெயின் சத்குரு இமேஜ்'ஸ் கேபிடல் பார்க், மனை எண். 1, 28 & 29, 98/4/1 முதல் 13 வரை, இமேஜ் கார்டன்ஸ் சாலை, மாதப்பூர், ஹைதராபாத், தெலுங்கானா 500081 என்ற முகவரிக்கு உறுப்பினர்கள் எழுதலாம்.

தேதி : 31.08.2023
இடம் : ஐதராபாத்

மெகாசாப்ட் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– ஸ்ரீதர் தத்தாச்சாரி
தலைமை நிதி அதிகாரி

---

**பெயர் மாற்றம்**

ராபர்ட் திரவியம் (Robert Thiraviyam) த/பெ திரவியம் வயது-29, பிறந்த தேதி: 09.03.1994 639, இசக்கியம்மன் கோவில் தெரு, சௌந்தரலிங்கபுரம், அடங்கார்குளம், திருநெல்வேலி -627 133 முகவரியில் வசிக்கும் நான் இனிமுதல் ராபர்ட் திரவியம் (RABERT THIRAVIYAM) என அழைக்கப்படுகிறேன்.

-ராபர்ட் திரவியம்(Robert Thiraviyam)

---

**பெயர் மாற்றம்**

ஷேக் முஹம்மது முஸ்தபா மைதீன் (Sheik Mohamed Mustafa Mydheen) த/பெ முஸ்தபா வயது-52, பிறந்த தேதி:03.05.1971 நெ.5/6, சொசைட்டி தெரு, பெருவிளை, நாகர்கோவில் -629003 கன்னியாகுமரி மாவட்டம் முகவரியில் வசிக்கும் நான் இனிமுதல் மைதீன் சேக் முஹம்மது முஸ்தபா (Mydeen Sheik Mohamed Musthafa) என அழைக்கப்படுகிறேன்.

ஷேக் முஹம்மது முஸ்தபா மைதீன் (Sheik Mohamed Mustafa Mydheen)

---

**BEFORE THE HON'BLE DISTRICT MUNSIF COURT AT TAMBARAM**
**O.S No: 52 / 2023**

S. Pathmavathy ... Plaintiff
Vs
Kasi Viswanathan & 3 others ... Defendants

The above-numbered case came up for hearing on 10.08.2023 before the Hon'ble District Munsif Court at Tambaram, and you 1). Selvi, (Respondent -3) aged 50 years, wife of Mr. Sakthivel residing at Door No.37, Varadharajan Street, T.Nagar, Chennai – 17, and 2) M.Palani (Respondent – 4) aged 47 years, son of Mr.Mariappan, residing at No.3/267, Senkeni Amman Koil Street, Neelangarai, Thiruvanmiyur, Chennai – 41, were not appeared before the Court despite of Court Notices / summon. Therefore, the Court ordered a Public Notice to be published in newspapers for your appearance before the Court on 14.09.2023 in the above-mentioned case, at 10.30. AM either in person or through a counsel, failing which you will be set exparte.

R.Rajkumar,
V.Srinivasan,
S.Chandralekha
Advocates, Chennai.

---

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, Varun Srinivas, S/O. Mr. K Srinivas, aged 23 years, permanently residing at Flat No.C4 Kcee Vriksham 14-21 Vasan Street T Nagar 6000017. Intend having my enrollment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high Court Campus, Chennai-600104. Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

VARUN SRINIVAS

---

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months there after. I, FASILA SALEEM, D/o. M. SALEEM, aged 23 years, permanently residing at No. 7A-4 DABC Mithilam, Sriram Nagar, Nolambur, Chennai- 600095. Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamil Nadu, Bar council building, high court campus, Chennai-600104. Those who have any valid objections may notify the same to the bar council within ten days.

FASILA SALEEM

---

**பெயர் மாற்றம்**

நான்,
BRIGHADEESWARAN K
த/பெ.R.காசிநாதன்
பிறந்த தேதி: 12.01.1983
பிறந்த ஊர்: சென்னை
வசிப்பிடம் எண்.1,
நேரு தெரு, ராஜாஜி நகர்,
திருவொற்றியூர்,
சென்னை- 600 019
இனி முதற்கொண்டு
PRAGADEESWARAN K
என்று அழைக்கப்படுவேன்.
BRIGHADEESWARAN K

---

**IN THE COURT OF VI ADDITIONAL CITY CIVIL JUDGE AT CHENNAI**
**OS2236 of 2021**

Master R.H.Vrishabvardhan ..... Plaintiff
-vs-
1. R.V.Gajalakshmi
2. R.V. Krishnapriya
3. R.V. Harshavardhan

all Residing at 27/1 Typhoon Ali Khan Street. Triplicane,Chennai-600005 ...... Defendants

Take Notice that in the above case filed by my client Namely Master.R.H.Vrishab Vardhan S/o. R.V. Harshavardhan against you the Defendants 1 to 3 Namely 1. R.V.Gajalakshmi , 2. R.V. Krishna Priya and 3. R.V. Harsha vardhan.

The Hon'ble Judge, VI Additional City Civil Court, Chennai ordered notice to the Defendents above named returnable by 07.09.2023

You the above said defendants there fore hereby summoned to appear before the Hon'ble Judge VI Additional City Civil Court, Chennai in the above case on 07.09.2023 at about 10.30 am in Person or by your counsel, Failing which the case will be heard and decided in your absence.

A.Vivek
J. Pragadeeshwaran
Advocates
Counsel for Plaintiff

---

**கோதி பிளாஸ்கான் (இந்தியா) லிமிடெட்**

CIN : L45400PY1994PLC008380
பதிவு அலுவலகம் : 17/5B,1A , வழுதாவூர் ரோடு,
விவசாய ஆராய்ச்சி மையம் எதிரில், குரும்பபேட்டை, புதுச்சேரி 605009
Website :www.gothiplascon.com e-mail :plascon747@gmail.com Phone : 0413-2271151

**அறிவிப்பு**

இதன் மூலம் அறிவிப்பதாவது:

1. கோதி பிளாஸ்கான் (இந்தியா) லிமிடெட் உறுப்பினர்களின் 28வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) சனிக்கிழமை 30.09.2023 அன்று இந்திய நேரப்படி காலை 11.00 மணிக்கு காணொளி காட்சி (VC)/பிற ஒலி ஒளி சாதனங்கள் (OAVM) வாயிலாக நடைபெறுகிறது. நிறுவனங்கள் சட்டம், 2013 ('சட்டம்') மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ('SEBI LODR'), பொது சுற்றறிக்கை எண்கள். 14/2020 தேதி ஏப்ரல் 08, 2020, 17/2020 தேதி ஏப்ரல் 13, 2020, 20/2020 தேதி மே 05, 2020 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் ('எம்சிஏ') வெளியிடப்பட்ட டிசம்பர் 28, 2022 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 10/2022 உட்பட பிற தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் மே 12, 2020, ஜனவரி 15, 2021, மே 13, 2022 மற்றும் ஜனவரி 05, 2023 தேதியிட்ட இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் ('செபி') வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள், மேலும் பிற பொருந்தக்கூடிய மற்றும் எம்சிஏ மற்றும் செபி தொடர்புடைய சுற்றறிக்கைகள் ஏதேனும் இருப்பின் அவற்றுக்கு இணங்க, (ஒட்டுமொத்தமாக 'AGM தொடர்பான சுற்றறிக்கைகள்' என குறிப்பிடப்படுகிறது) வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை செயல்படுத்த உறுப்பினர்கள் VC/OAVM வசதி மூலம் மட்டுமே AGM–ல் கலந்து கொள்ள முடியும் மற்றும் பங்கேற்க முடியும். இதற்காக, சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ("சிடிஎஸ்எல்") நிறுவனத்தால் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
2. VC/OAVM வசதி மூலம் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் சட்டத்தின் பிரிவு 103–ன் கீழ் குறைந்தபட்சம் பங்கேற்பதை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.
3. சுற்றறிக்கைகளுக்கு இணங்க, கம்பெனி/டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2022–2023 ஆண்டறிக்கை ஆகியவற்றின் மின்னணு நகல் மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளது. இது 31.08.2023 அன்று நிறைவடைந்தது. மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் அவர்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் ஆர்டிஏ நிறுவனத்துடன் murali@cameoindia.comல் தங்களது மின்னஞ்சல் முகவரியை புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. 28வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் 2022–23 ஆண்டறிக்கை ஆகியவை கம்பெனியின் வலைதளம் www.gothiplascon.comல் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த அறிவிப்பை பங்குச் சந்தைகளின் வலைத்தளங்களிலிருந்து அதாவது பிஎஸ்இ லிமிடெட் www.bseindia.comல் மற்றும் சிடிஎஸ்எல் வலைத்தளம் (வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறும் போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு முறையில் வாக்களிப்பு முறையை வழங்கும் நிறுவனம்) www.evotingindia.comல் அணுகலாம்,
5. கட் ஆப் தேதி (23.09.2023) அன்று காகித வடிவில் அல்லது பத்திரமில்லாத வகையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் மீது சிடிஎஸ்எல் ('தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) மூலமாக அளிக்கப்படும் மின்னணு முறையில் வாக்குகளை பதிவு செய்யலாம். இதன் மூலம் அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படுவது:–
   - i. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவு முறையின் மூலமாக செயல்படுத்தப்படும்.
   - ii. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு புதன்கிழமை, 27.09.2023 அன்று (இந்திய நேரப்படி காலை 9.00 மணி) தொடங்கி வெள்ளிக்கிழமை, 29.09.2023 அன்று (இந்திய நேரப்படி மாலை 5.00) முடிவடைகிறது.
   - iii. கம்பெனியின் உறுப்பினர்கள் ரிஜிஸ்தர் மற்றும் பங்கு மாற்ற புத்தகங்கள் 24.09.2023 முதல் 30.09.2023 வரை (இரு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவு முறையில் வாக்குப்பதிவு செய்ய தகுதி உடையவர்களை தீர்மானிக்க கட் ஆப் தேதியாக 23.09.2023 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
   - iv. கம்பெனியின் பங்குகளை பெற்று மற்றும் அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் உறுப்பினரான நபர் மற்றும் கட் ஆப் தேதி அன்று பங்குகளை வைத்துள்ளவர்கள் ஆர்டிஏ–க்கு கோரிக்கை விடுத்து லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே சிடிஎஸ்எல்–ல் பதிவு செய்தவர் அவரது தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.
   - v. உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது: a) 29.09.2023 அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு செயலிழக்க செய்யப்பட்டுவிடும் மற்றும் உறுப்பினர் ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்துவிட்டால் அதனை பின்னர் மாற்ற அனுமதிக்கப்படமாட்டார். b) வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் வாக்களிக்கும் வசதி செய்யப்படும். காணொளி காட்சி மூலம் ஆஜராகும் உறுப்பினர்கள் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்காதவர்கள் மற்றும் அவ்வாறு செய்ய தடை விதிக்கப்படாதவர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு முறையில் வாக்களிக்கலாம். c) வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை செய்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ஆஜராகலாம். ஆனால் மறுபடியும் வாக்களிக்க உரிமை கிடையாது மற்றும் d) கட்ஆப் தேதியன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயரில் இருக்கும் நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை பெறலாம் அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு முறையில் வாக்களிக்கலாம்.
   - vi. பத்திரமில்லாத வகையில், காகித வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் அளிக்கப்பட்டுள்ளது. அந்த விவரங்கள் கம்பெனியின் வலைதளம் www.gothiplascon.comல் உள்ளது.
   - vii. காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் பான், மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண், வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் நாமினி ஆகியவற்றை மார்ச் 16, 2023 தேதியிட்செபி சுற்றறிக்கை எண். SEBI/HO/MIRSD/ivIIRSD-PoD-1/P/CIR/2023/37–க்கு இணங்க பதிவு செய்யுமாறு/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு செய்யத் தவறினால், பங்குதாரர்களின் போலியோ RTA–ஆல் முடக்கப்படும். பங்குதாரர்கள் இந்த விவரங்களைப் பதிவுசெய்து/புதுப்பிக்குமாறு, படிவம் ISR–1ல் உரிய சான்றுகளுடன் எங்கள் RTA–க்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
   - viii. மின்னணு–வாக்களிப்பு சம்பந்தமாக ஏதேனும் வினவல் மற்றும்/அல்லது குறைகள் இருந்தால், பங்குதாரர்கள் CDSL இணையதளத்தின் www.evotingindia.com–ன் உதவிப் பிரிவின் கீழ் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை ('FAQs') பார்க்கலாம் அல்லது தொடர்பு மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மராத்தான் ஃப்யூச்சர்க்ஸ், மஃபத்லால் மில் காம்பௌண்ட்ஸ், என் எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400013 அவர்களை தொடர்பு கொள்ளவும் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது மேலும் விளக்கங்களுக்கு 1800 22 55 33 என்ற கட்டணமில்லா எண்ணை அழைக்கவும்.

இடம்: சென்னை
தேதி: 26/08/2023

குழுவின் சார்பாக
ஒப்பம்/– சஞ்சய் கோதி
(DIN 00600357)
சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்

# Samatva Foundation to felicitate Karaikudi Mani



Chennai, Sept 2: The Samatva Foundation is preparing for an exceptionally distinctive occasion to commemorate the legacy and musical contributions of the Mridangam Legend, Nadayogi GURU Vidwan Sri Karaikudi R. Mani. This event is scheduled on September 12, 2023, a day after his 78th birthday and will take place at the Bangalore Gayana Samaja Auditorium. The event is a collaborative effort with the Anoor Ananthakrishna Sharma Foundation for Music and The Bangalore Gayana Samaja.

GURU Karaikudi R. Mani was not only a sentiment but also a genuine trailblazer through his innovative perspective on Indian Music. The diverse programs scheduled for the event encompass the profound influences of GURU Karaikudi R. Mani across various facets of Indian music, dance, and percussive art. This celebration aims to honor his life and musical achievements. The event 's inauguration will be graced by esteemed personalities including Sri M. T. Rajakesari, Dr. Suresh Vaidyanathan, Dr. Rajeshwari Sainath, Dr. M. R. V. Prasad, and Sri Anoor Ananthakrishna Sharma.

